(e) At present, there are no arrangements for assessing the flows in Vaigai, and after Vaigai reservoir comes to function, arrangements will be made for assessing the flows.

Vaigai waters

* 18 *S.N.Q.*—SRI R. CHIDAMBARA BHARATHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the nature of assurance given to the ayacutdars of the Vaigai river at the time of the construction of the Vaigai Dam; and

(b) the steps taken to implement the assurance?

THE HON. SRI P. KAKKAN : (a) An assurance was given to the ryots that the scheme would be so worked that no portion of the Vaigai flows impounded in the reservoir would be allowed for areas other than those under the Old Vaigai channels and tanks served by them.

(b) Implementation can be done when the project is thrown open for operation.

* 19 *S.N.Q.*—SRI R. CHIDAMBARA BHARATHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to constitute a Committee to formulate a scheme in the Vaigai ayacut lands in Madurai and Ramanathapuram districts using the Vaigai waters?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸர், வைகை ஏரியிலிருந்து பேரணைக்கு தண்ணீர் கொண்டு போவதற்கு முன்பாக ராமனாதபுரம் சமஸ்தான முதல் மந்திரியாக முத்திருளப்பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் இந்த வைகை அணை கட்ட முடியாது என்று இரண்டு இன்ஜினியர்கள் தெரிவித்ததின் பின்னால் மூன்றாவது இன்சினியர் முயற்சி எடுத்து இந்த பெரியாறு பிராஜக்டைக் கட்டும்போது இதிலிருந்து 90 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் பாசனத்திற்கு தண்ணீர் கொடுப்பதில்லை என்று அப்போதிருந்த சர்க்கார் ஹைகோர்ட்டில் உறுதி கூறியிருக்கிறதா, அப்படி உறுதி கூறியிருக்கும்பொழுது இப்போது லட்சத்தி நாற்பதினாயிரம் ஏக்கர்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் முன்னால் கூறியிருந்ததை மாற்றியிருப்பது இப்போதுள்ள சர்க்காரினுடைய கொள்கை விரோதமானதில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கேள்வியில் அனேகம் கேள்விகள் அடங்கியிருக்கின்றன. இதற்கு எல்லாம் தனித்தனியாக கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸார், இபோது கனம் மந்திரி அவர்கள் சொல்லியதிலிருந்து தண்ணீரை இதுவரை அளவு எடுக்கவில்லை என்று தெரிகிறது. அப்படியானால் அவ்விதம் அளவு எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அவ்விதம் அளவு எடுக்கின்ற காலம் வரையிலும், வைகை பாசனத்திலிருந்து தண்ணீர் கிடைக்காததினால் விவசாயிகள் அடைந்திருக்கும் நஷ்டத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

24th September 1958]

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியில் முதல் பகுதிக்கு நான் முதலில் பதில் சொன்னேன். அதாவது வைகை அணைத்திட்டம் முடிந்த பிறகு தான் தண்ணீர் அளவை எடுக்க முடியும். அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. ஆனால் நஷ்ட ஈடு கொடுக்க முடியுமா என்ற கேள்விக்கு முடியாது என்றுதான் சொல்லமுடியும். தண்ணீர் அதிகமில்லாமலிருக்கும்போது கஷ்டமில்லாமல் தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

SRI V. SANKARAN : ஸார், பெரியாறு திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் வைகையிலிருந்து நேராக பாசனம் பெறும் இடங்களும் அதில் சேர்க்கப்பட்டன. இந்த நிலங்களுக்கு எல்லாம் தண்ணீர் குறையாமல் கொடுக்க முடியுமா ? இதற்கு தகுந்தபடி சர்க்கார் அளவு செய்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN: நான் ஏற்கனவே பதிலில் சொன்னேன். மழை காலத்தில் வீணாகப்போகும் தண்ணீரை மேலும் அவசியத்திற்கு தகுந்தபடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : ஸார், இந்த வைகைத் திட்டம் எவ்வளவு காலத்தில் முடிவு அடையும் ?

THE HON. SRI P. KAKKAN : ஒன்றிரண்டு மாதங்களில் முடிவடையும் என்று எதிர் பார்க்கலாம்.

SRI K. RAMACHANDRAN : பெரியாறு அணையினால் தண்ணீர் கொடுக்கப்படும் வைகை ஆயக்கட்டு நிலங்கள் எத்தனை ஏக்கர் ? வைகை பிராஜக்ட் மூலம் தண்ணீர் கொடுக்கப்படும் ஆயக்கட்டு நிலங்கள் எத்தனை ஏக்கர் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே பெரியார் அணை மூலம் லட்சத்தி நாற்பத்திமூவாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்கப்படும் என்றிருக்கிறது.

(Sri K. Ramachandran was standing in his place.)

MR. SPEAKER : If the hon. Member is not satisfied with the answer, he may put a separate question.

SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : இந்த திட்டம் அமுலுக்கு வந்த பிறகு அளவு எடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக இப்போதே நடவடிக்கை எடுப்பார்களா ? இப்போதே நடவடிக்கை எடுத்தால் இதை அமுலுக்கு கொண்டு வருகிற சமயத்தில் இதைப்பற்றி முடிவு எடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆதலால் இப்போதே அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அங்குள்ள இஞ்சினியர்களுக்கு உத்தரவு கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போதே ஏற்பாடு செய்துகொண்டு தான் இருக்கிறோம்.

SRI S. RAMAKRISHNA THEVAR : கனம் சபா நாயகர் அவர்களே, இப்போது வைகை அணைக்கட்டு மூலமாக தனியாக 20 ஆயிரம் ஏக்கர்களுக்கு இந்தத் தண்ணீரை உபயோகப்படுத்தப் போவதாக சொன்னார்கள். ஆனால் இப்போது பரமக்குடி, ராமநாதபுரம், திருவாடனை தாலூகாக்களில் நாலைந்து மாதங்கள் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. ஆகவே. . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு சிறிய பிரசங்கம் செய்யக்கூடாது, கேள்வி ரூபமாக கேட்க வேண்டும்.

[24th September 1958

SRI S. RAMAKRISHNA THEVAR : ஆகவே இவ்விதம் தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது அவர்களுக்கு உடனடியாக என் தண்ணீர் கொடுக்கவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதிலிருந்து நான் தெரிந்து கொள்வதென்னவென்றால் வீணாகப் போகும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு வேண்டியபோது கொடுத்து உதவி செய்வார்களா என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸார் பெரியாறு கட்டுவதற்கு முன்னால் வைகை பாசனத்தின் மூலம் 11 ஆயிரம் எக்கர்களுக்கு தண்ணீர்த் கொடுக்கப்போவதாக ஒரு உறுதி சொன்னார்கள். இப்போது அந்த உறுதி என் அனுசரிக்கப்படவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : மழை பெய்வதை பொறுத்துத்தான் தண்ணீர் கிடைக்கும்.

Transport Department

* 20 *S.N.Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any recruitment was made since the appointment of the Committee constituted for recruitment of staff in the Transport Department; and

(*b*) whether any recruitment was made for the Nagercoil Transport Department and if not, why?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The answer to the first part of the question is in the affirmative. The second part does not arise.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know the authority which recruited them after the Government notification?

THE HON. SRI V. RAMAIAH : In Kanyakumari district?

SRI T. S. RAMASWAMY PILLAI : Here.

THE HON. SRI V. RAMAIAH : In Madras one batch of recruitment was done by the Honorary Director. The other was through the approval of the Director done by the Deputy Director.

9 10 a.m. SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, this Committee was appointed by the Government and a notification was issued, when charges of nepotism and favouritism were made on the floor of this House. So, may I know why, even after the appointment of this Committee, the Director of Transport has disobeyed the order of the Government by recruiting them?

THE HON. SRI V. RAMAIAH : There is no question of disobeying the order of the Government. The Committee was constituted and discussion is going on on the terms of reference. As it is not finalised, to meet some emergency needs, a few appointments had been made.